ஈரோடு மாவட்ட

# ஆதித்தமிழர் பேரவை நிர்வாகக்குழு கூட்டம்

ஈரோடு, பிப்.8–

ஈரோடு மாவட்ட ஆதித்தமிழர் பேரவையின் நிர்வாகக்குழு கூட்டம், பவானியில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் தமிழ் இன்பன் தலைமை தாங்கினார். ராஜு, அங்குராசு, செம்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கவுந்தப்பாடி சந்தையில் மாட்டு இறைச்சி கடைகளுக்கு வளாகம் கட்டிக்கொடுக்கும் வரை அதே இடத்திலேயே கடை நடத்த அனுமதிக்க வேண்டும். கூடங்குளம் அணு மின் நிலையத்தை நிரந்தரமாக மூட வேண்டும். முல்லைப்பெரியாறு பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். தானே புயலில் பாதிக்கப்பட்ட பகுதிகளை முழுமையாக கணக்கெடுத்து உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் நிர்வாகிகள் குருநாதன், குமார், சுப்பிரமணி, செந்தில்குமார், ரவி, யுவராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஆறுமுகம் வரவேற்று பேசினார். முடிவில் முருகேசன் நன்றி கூறினார்.

தினத்தந்தி

# ஆதித்தமிழர் பேரவை நிர்வாக குழு கூட்டம்

ஈரோடு, பிப். 9: ஈரோடு மாவட்ட ஆதித்தமிழர் பேரவை சார்பில் நிர்வாக குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் தமிழ்இன்பன் தலைமை வகித்தார். ஆறுமுகம் வரவேற்றார். ராசு, அங்குராசு, செம்பன் முன்னிலை வகித்தனர். முருகேசன் நன்றி கூறினனர். குருநாதன், குமார், சுப்ரமணி, செந்தில்குமார், ரவி, யுவராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:

கவுந்தப்பாடி சந்தையில் மாட்டிறைச்சி கடைகளுக்கு வளாகம் கட்டி கொடுக்கும் வரை அதே இடத்திலேயே இறைச்சி கடைகளை நடத்த அனுமதிக்க வேண்டும். இது தொடர்பாக தொடரப்பட்டுள்ள பொய் வழக்குகளை ரத்து செய்து இப்பிரச்னைக்கு காரணமானவர்கள் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்தியூர் வட்டக்காடு பகுதியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர்கள் மீது வன்கொடுமை தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்ய வேண்டும்.

கூடங்குளம் அணுமின் நிலையத்தை நிரந்தரமாக மூட வேண்டும். அதற்கான வல்லுநர் குழுவில் போராட்டக்குழு உறுப்பினர்களை இணைத்து செயல்பட வேண்டும். முல்லைப்பெரியாறு பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்.

தானே புயலில் பாதிக்கப் பட்ட பகுதிகளை முழுமையாக கணக்கில் எடுத்து உரிய நிவாரணம் வழங்க வேண்டும். நிலுவையில் உள்ள வன்கொடுமை தடுப்புச்சட்ட வழக்குகளை உடனடியாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

மாலைமலர்



கூட்டத்தில் ஆறுமுகம் பேசியபோது எடுத்தபடம். அருகில் மாவட்ட தலைவர் தமிழ்இன்பன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# கூடங்குளம் அணுமின்நிலையத்தை நிரந்தரமாக மூட வேண்டும்

## ஆதித்தமிழர் பேரவை கூட்டத்தில் வலியுறுத்தல்

பவானி, பிப். 9–

ஆதித்தமிழர் பேரவையின் ஈரோடு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் பவானியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் தமிழ்இன்பன் தலைமை தாங்கினார். ஆறுமுகம் வரவேற்றார். இதில் ராஜா, அங்குராசு, செம்பன், மகாபதி, மூர்த்தி, செல்லம்மா, தவசி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் பேரவை நிர்வாகிகள் குருநாதன், குமார், சுப்பிரமணி, செந்தில்குமார், ரவி, யுவராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

மாட்டிறைச்சி கடை

கவுந்தப்பாடி சந்தையில் மாட்டிறைச்சி விற்க தடை விதித்ததை வன்மையாக கண்டிக்கிறோம். மாட்டிறைச்சி கடைகளுக்கு தனியாக வளாகம் கட்டி கொடுக்கும் வரை அதே இடத்தில் மாட்டிறைச்சி விற்க அனுமதிக்கவேண்டும். அந்தியூர் வட்டக்காடு குப்பன் சக்கிலி தோட்டத்தை ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டு குப்பன் சக்கிலி வகையறாவிடம் ஒப்படைக்க வேண்டும்.

கூடங்குளம்

கூடங்குளம் அணுமின் நிலையத்தை நிரந்தரமாக மூடவேண்டும். அதற்காக தமிழகஅரசு நியமித்துள்ள வல்லுனர் குழுவில் போராட்டக்குழு உறுப்பினர்களையும் சேர்க்க வேண்டும்.

முல்லை பெரியாறு அணை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்.

தானே புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முழுமையாக கணக்கில் எடுத்து உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.